1970 மார்ச் 13]

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) வட ஆற்காடு கூட்டுறவு சர்க்கரை ஆலை, ஆம்பூர், கள்ளக்குறிச்சி கூட்டுறவு சர்க்கரை ஆலை, மூங்கில்துறை பட்டு ; சேலம் கூட்டுறவு சர்க்கரை ஆலை, மோகனூர் சர்க்கரை ஆலை.

(இ) பல துறைகளிலுள்ள இளம் அதிகாரிகள் தொழில் நிறுவனங்களின் நிர்வாகத் திறமையில் தேர்ச்சி பெற வேண்டும் என அரசு விரும்புகிறது.

திரு. வி. கே. கோதண்டராமன் : சார், இந்த ஐ.ஏ.எஸ். அதிகாரிகளை ஏற்படுத்தியதற்குக் காரணமே, ஏற்கெனவே நல்ல முறையிலே நடந்து கொண்டிருந்த அந்தச் சர்க்கரை ஆலைகளிலே நிர்வாகம் மோசமான அளவுக்குப் போனதால்தான் அந்த ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் நியமிக்கப்படுவதாகச் சொல்லப்படுகிறது. அது உண்மையா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : ஐ. ஏ. எஸ். அதிகாரிகள் போனால் நல்ல நிர்வாகம் நடக்கும் என்று அங்கத்தினர் ஒப்புக்கொண்டதற்கு நன்றி.

குப்பம் பகுதியில் உரேனியம், தோரியப் படிவங்கள்

* 356 வினா—திரு. ஆர். கருப்பையா : மாண்புமிகு தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) வட ஆற்காடு மாவட்டம் குப்பம் பகுதியில் அணுசக்திக்குத் தேவையான உரேனியம், தோரியம் கிடைப்பதாகக் கண்டு பிடிக்கப்பட்டுள்ளதா ?

(இ) இதனை எடுக்க அரசு மேற்கொண்டுள்ள முயற்சிகள் யாவை ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

திரு. ஆர். கருப்பையா : தலைவரவர்களே, அணுசக்திக்குத் தேவையான உரேனியம் போன்ற பொருள்கள் திருச்சி மாவட்டத்தில் அரியலூருக்கும் கீழப்பழுவூருக்கும் இடையே கிடைப்பதாகச் செய்தி வந்தது. அப்படிக் கிடைக்கும் அந்தப் பொருள்கள் உண்மையானவைதானா என்று கண்டு பிடிக்க, ஒரு கமிட்டியையோ அல்லது அதிகாரிகளையோ நியமித்து ஆவன செய்ய அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : கேள்வி, வட ஆர்காடு மாவட்டத்தைப் பற்றியது. திருச்சி ரொம்ப தூரம். திருச்சியைப் பற்றித் தனியாகக் கேள்வி போட்டால் விவரம் சேகரித்துத் தரலாம்.

திரு. எஸ். ஜே. ராமசாமி : தலைவரவர்களே, கேள்வி வட ஆற்காடு பற்றியது என்று சொன்னார்கள். அந்தக் குப்பத்திலே அணுசக்திக்கு வேண்டிய உரேனியம் கிடைக்கிறதா என்று கேள்வி

போட்டிருக்கிறது. அது பற்றி ஆராய்ச்சி நடத்தப்பட்டதா? சர்வே செய்யப்பட்டதா? அந்த இடத்திலே என்ன அகப்பட்டது?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : நம்முடைய ஜியாலில் துறை நடத்திய ஆராய்ச்சியில் திருப்பத்தூர் அருகிலுள்ள சவத்தூர்-கொரட்டி கிராமங்களில் இதுபோன்ற பொருள்கள் ஓரளவுக்குக் கிடைப்பதாக ஒரு தகவல் கிடைத்தது. ஆனால் இது குப்பம் என்ற இடத்திலே என்று ஒரு தவறான தகவல் பத்திரிகையில் வெளி வந்தது. ஆனால் இந்த இடத்திலே கிடைப்பதைப்பற்றி நமக்குத் தேவையான அளவுக்கு, எக்கனாமிக்கலாக யூஸ் பண்ணக் கிடைக்குமா என்பதுபற்றி ஆராய்ச்சி நடத்த வேண்டியிருக்கிறது.

பல்புகள் உற்பத்தி

* 357 வினா—திரு. எஸ். சிவசுப்பிரமணியன் : மாண்புமிகு தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

பல்பு உற்பத்தி செய்யும் தொழிற்சாலை ஒன்றை ஏற்று நடத்த அரசாங்கத்தில் ஏதேனும் திட்டம் இருக்கிறதா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இல்லை.

திரு. எஸ். சிவசுப்பிரமணியன் : இல்லையென்றால், பல்புகளின் எண்ணிக்கையை அதிகமாகத் தருவதற்காக, திரும்பவும் பரிசீலித்து, இந்தத் தொழிற்சாலையை ஏற்படுத்த அரசாங்கம் முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : கேள்வி, பல்பு உற்பத்தி செய்யும் தொழிற்சாலை ஒன்றை ஏற்று நடத்த அரசாங்கத்தில் ஏதேனும் திட்டம் இருக்கிறதா என்று. இல்லை என்று சொன்னேன். தனியார் துறையில், கல்கத்தாவிலுள்ள ஒரு கம்பெனிக்காரர், இங்கே வந்து 6 மில்லியன் பல்பு உற்பத்தி செய்யத் தொழிற்சாலைக்கு அனுமதி கேட்டிருக்கிறார். நாம் சிபாரிசு செய்து இருக்கிறோம். அண்மையில் நானும், கனம் முதலமைச்சரவர்களும், யூனியன் தொழில் அமைச்சரைப் பார்த்தபொழுது, இந்தத் தொழிற்சாலைக்குக் கூடிய விரைவிலே அனுமதி தரலாம் என்று கூறினார்கள்.

திரு. பெ. மலைச்சாமி : தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் கல்கத்தா நிறுவனத்தார் பல்புகள் மட்டும் உற்பத்தி செய்வதற்கு ஒத்துக் கொண்டிருக்கிறார்கள் என்று சொன்னார்கள். ஏனைய பொருள்களும் தமிழக மின்சார வாரியத்திற்கு இப்பொழுது தட்டுப்பாடு உள்ளது. அகவே, வேறு பொருள்களையும் கல்கத்தா நிறுவனத்தார் உற்பத்தி செய்து தருமாறு இந்த அரசு கேட்டுக் கொள்ளுமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : எந்தெந்தப் பொருள்கள் நமக்குத் தேவையாக இருக்கின்றனவோ அவைகளை யெல்லாம் உற்பத்தி செய்வதற்குத் தொழிற்சாலைகள் தொடங்கலாம்.